**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**MCOP.No: 64/2021** **நாள் 17.02.2026**

**ம.சா.1, திரு.ஜோதிராஜா**

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை—**

விபத்தில் இறந்துபோனவர் பெயர் முனீஸ்வரன். அவர் என் உடன் பிறந்த தம்பி. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு நேரில் தெரியாது. சம்பவம் தொடர்பாக கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்துார்கள் என்று கேட்டால் தெரியாது. சாட்சி மீண்டும் தானாக கருப்பசாமி என்பவர் புகார் கொடுத்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். முதல் தகவல் அறிக்கையில் இந்த விபத்து சம்மந்தமாக கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் எனது அப்பா ஈஸ்வரன் என்பவர் தான் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்தது எப்படி என்றும் என் அப்பாவுக்கு அப்போது நேரில் தெரியாது. என் அப்பா கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். விபத்து சமயத்தில் இறந்துபோன என் தம்பி பயணம் செய்த ஆட்டோவை ஓட்டிச்சென்றவர் பெயர் பாண்டிமுனியாண்டி. நான் டிப்ளமோ படிப்பை படித்து விட்டு தற்போது கிருஷ்ணன்கோவிலில் வேலை பார்க்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் TN 84 B 1922 என்ற ஆட்டோவில் பாண்டிமுனியாண்டி என்பவர் ஓட்டிச்செல்ல அவரது அருகில் டிரைவர் சீட்டில் தான் என் தம்பி முனீஸ்வரனை பக்கத்தில் அமரவைத்து தான் அந்த ஆட்டோ ஓட்டிசெல்லப்பட்டதாக தான் கூறப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக ஆட்டோவில் பயணம் செய்யும்போது டிரைவர் சீட்டுக்கு அருகாமையில் உட்கார்ந்து பயணம் செய்யக்கூடாது என்றால் சரிதான். அது போக்குவரத்து விதிகளை மீறிய செயல் என்றால் சரிதான். எனவே போக்குவரத்து விதிமுறைகளை மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எந்தவிதமான விபத்து இழப்பீடு தொகையை செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னால் அப்படியில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையில் என் தம்பி முன்பக்கம் ஓட்டுநர் இருக்கையில் அருகாமையில் பயணம் செய்து கொண்டுள்ள போது எதிரே வந்த காருக்கு வழிவேண்டி ஆட்டோவை பாண்டிமுனியாண்டி இடதுஓரத்தில் ஒதுக்கியபோது உடன் உட்கார்ந்திருந்த முனீஸ்வரன் வண்டியில் இருந்து வலதுபக்க தார்ரோட்டில் குதித்துவிட்டதாகவும் அதனால் அவருக்கு தலையில் காயம்பட்டதாகவும் காது மூக்கில் இரத்தம் வந்ததாகவும் சொல்லியுள்ளதுஎன்று சொன்னால் அப்படி தான் சொல்லியுள்ளது. சாட்சி மீண்டும் தானாக தன் தம்பியானவர் வலது பக்க தார் ரோட்டில் குதிக்கவில்லை என்றும் தவறி தான் கீழே விழுந்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். முதல் தகவல் அறிக்கையுடன் என் அப்பா காவல் நிலையத்தில் கொடுத்திருந்த புகார் மனுவின் மனுவும்

இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரிலும், ஆட்டோவில் முன்பக்கத்தில் பயணம் செய்த தன் மகன் முனீஸ்வரன் என்பவர் வலது பக்க தார் ரோட்டில் குதித்துவிட்டதில் காயம் ஏற்பட்டதாகவும் , அவர் அதில் சொல்லியுள்ளார் என்றால் புகார் மனுவில் அவ்வாறு தான் சொல்லியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் Accidental Fall என்று தான் சொல்லப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆட்டோவில் பயணம் செய்த என் தம்பி வேண்டுமேன்றே வலதுபக்க தார் ரோட்டில் குதித்து அவர் விபத்தினை தன்னை தானே வரவழைத்துக்கொண்டார் என்றால் அது சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமான குற்ற இறுதி அறிக்கையினை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ்குற்ற இறுதி அறிக்கையானது இந்த வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்றும் விபத்திற்கு யார் காரணம்என்று குற்ற இறுதி அறிக்கையில் துலங்கும் என்று சொன்னால் அது சரிதான். மேற்படி குற்ற இறுதி அறிக்கையானது முக்கியமான ஆவணம் என்பதால் அதனை நான் தாக்கல் செய்யாததால் எங்கள் மனுவானதை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அதுசரியல்ல. ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையும் இவ்வழக்கிற்கு முக்கியமான ஆவணம் என்றும் அதனையும் நான் தாக்கல் செய்யாததால் எங்கள் மனுவானதை தள்ளுப5டி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அதுசரியல்ல. நாங்கள் கேட்டுள்ள விபத்து இழப்பீடு தொகை 3ம் எதிர்மனுதாரர் தர்ப்பில் ெலுத்தவேண்டியதில்லை என்றும் எனவே நாங்கள் தாக்கல் செய்த மனுவானதை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் அது சரியல்ல. விபத் சமயத்தில் அந்த ஆட்டோவில் அனுமதிக்கப்பட்ட பயணிகளை விட அதிக நபர்கள் பயணம் செய்துள்ளார்கள் என்றும் அது மோட்டார் வாகனசட்டம் விதி முறைகள் மற்றும் பாலிசி நிபந்தனைகளை மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகையை செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஆட்டோவனாது 3ம் எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் ஆட்டோவை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு செல்லத்தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், மேற்படி ஆட்டோவிற்கு செல்லதகுந்த தகுதி சான்று, அனுமதி சான்று, பதிவு சான்று ஊர்ஜிதத்தில் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.மேற்படி ஆவணங்கள் விபத்து சமயத்தில் ஊர்ஜிதத்தில் இல்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரர் வாகன உரிமையாளர் மோட்டார் வாகன சட்டம் விதிமுறைகளையும் பாலிசி விதிமுறைகளையும் மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகையை செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னா்ல அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ.15ல் வாரிசு சான்றிதழில் என்னுடைய பெயர் இல்மைல என்று சொன்னால் அது சரிதான் எனவே நான் இறந்துபோனவருக்கு வாரிசு இல்லை என்பதால் நான் விபத்து இழப்பீடு தொகையை கோரமுடியாது என்று சொன்னால் அதுசரியல்ல. விபத்து சமயத்தில் என் தம்பி 10ம் வகுப்பு வரை படித்திருந்தார். அவர் எந்தவித வருமானமும் செய்யவில்லை என்றும் அவரது

இறப்பினால் எங்களுக்கு எந்தவிதமான வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. விபத்திற்கு யார் காரணம் என்று தெரியவந்துவிடும் என்பதற்காக வேண்டி குற்ற இறுதி அறிக்கை நகலை நாங்கள் வேண்டுமென்றே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யயாமல் உள்ளோம் என்றால் அப்படியில்லை. எங்களுக்கு ஏதேனும் விபத்து இழப்பீடு தொகை கிடைக்க பெறவேண்டும் என்றால் அதை ஆட்டோவின் உரிமயாளரரான 1ம் எதிர் மனுதாரர் தான் செலுத்தவேண்டும் என்றும் 3ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டியது இல்லை என்றும் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17thday of February 2026

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.